**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி. P. கனிமொழி , L. L. M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ம் நாள் திங்கட் கிழமை
திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 23 ம் நாள்

TNMY09-001590-2024

**OS.No. 30/2024**

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம், மேலகாசாக்குடி கிராமம், கதவிலக்கம் 53 வீட்டில் வசித்து வரும் மருதமுத்து குமாரர் இந்து, இளங்கோவன் அவரது பவர் ஏஜெண்டுகளான...

1) திருவாரூர் மாவட்டம், திருவாரூர், விஜயாபுரம், கொடிக்கால் தெரு, கதவிலக்கம் 22 வீட்டில் வசித்து வரும் பக்கிரிசாமி, இந்து, குமாரர் 42 வயதுள்ள அழகுசுந்தரம்

2) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முன்சிப் கோர்ட் தெரு, கதவிலக்கம் 2டி வீட்டில் வசித்து வரும் பக்கிரிசாமி இந்து, குமாரர் 44 வயதுள்ள திரு. சுப்பிரமணியன்

.....வாதி

//எதிர்//

1. சென்னை சிட்டி சிவில் கோர்ட் அதிகார எல்லைக்குட்பட்ட சென்னை – 600 090, பெசண்ட் நகர், கலாஷேத்தர காலனி, கோஸ்டல் ரோடு, எர்த் சென்ஸ் அட்வன்சர்ஸ் பிரைவேட் லிட் கம்பெனியில் பணிபுரியும் லேட் அய்யாசாமி மனைவி, இந்து 65 வயதுள்ள கலைவாணி

2. தரங்கம்பாடி தாலுக்கா மற்றும் முன்சிபி, பொறையார் & அஞ்சல், காட்டுநாயக்கன் தெருவில் வசித்து வரும் கலியபெருமாள் குமாரர், இந்து, பேரூராட்சி துப்புரவு பணியாளர், சேகர்

..... பிரதிவாதிகள்

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 31.10.1996 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள கிரய சாசனத்தில் உள்ள சொத்தின் புல எண்.172/1A 1A என்பது சரியல்ல என்றும், அந்த அடிப்படையில் மேற்படி கிரய சாசனம் ( ஆவண எண்.655/1996) செல்லாது என்றும், அது வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் விளம்பல் பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாக்கலான நாள் – 17.04.2024
இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் – 24.04.2024
இவ்வழக்கின் வழக்குமூலம் – 07.04.1985, 21.08.2008, 17.03.2023, 04.09.2023 பொறையார் கிராமத்தில் உற்பத்தி.

இவ்வழக்கின் நீதிமன்ற கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்குமாக ரூ.5,000/– என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ.150/– நீ.ம.க.ச பிரிவுகள் 25(d) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 24.04.2024ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 30.03.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. செந்தில்அழகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. வேலாயுத ராஜா அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அவர் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 19.10.2024 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை**

1. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 31.10.1996 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள ஆவண எண்.655/1996 என்ற கிரய சாசனத்தில் உள்ள சொத்தின் புல எண்.172/1A 1A என்பது சரியானது அல்ல என்ற அடிப்படையில் மேற்படி கிரய சாசனம் செல்லாது என்றும், அது வாதியின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் வாதி கோரிய விளம்பல் பரிகாரம் வாதிக்கு அளித்து வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. செலவுத்தொகையில்லை என்று தீர்ப்பாணையிடப்படுகிறது.

**சொத்து விபரம்:-**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார் பதிவகத்தைச் சேர்ந்த, தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் கிராமம்

புல எண்.172/1A1A- நஞ்சை - ஏ.3.33 1/3 செண்ட்.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் இடப்பட்டது.

(ஒப்பம்) P. கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி